# வருணனைக் கட்டுரை

கோடை விடுமுறைக்கு இலக்கியாவும் ஓவியனும் தாயகம் சென்றார்கள். இலக்கியாவும் ஓவியனும் பாட்டியின் வீட்டுக்கு அருகே பச்சைப்பசேல் என்று காணப்பட்ட வயல்வெளிகளைப் பார்த்து வியந்தனர். பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற நெல்வயல்கள்; வயலூடே பாம்பு நெளிந்துநெளிந்து ஓடுவது போன்று நீரோடும் வாய்க்கால்கள்; வளைந்துவளைந்து செல்கின்றன. இவற்றைப் பார்த்து மகிழ்ந்தவாறே வயல் வரப்புகளில் நடந்தனர். மாலையானதால் இலக்கியாவும் ஓவியனும் வீட்டுக்குச் செல்ல நினைத்தனர். அப்போது கதிரவன் மறையத் தொடங்கியது. அடிவானம் செக்கச்செவேல் என்று சிவந்திருந்தது. கதிரவன் தங்கத் தகடுபோல் மின்னிக்கொண்டிருந்தது. வண்ணவண்ணப் பறவைகள் தங்கள் கூடுகளைத் தேடி அழகான பல கோலங்களில் பறந்துகொண்டிருந்தன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது இருவருக்கும் தாயகத்திலேயே இருந்துவிடலாம் என எண்ணத் தோன்றியது. இரவு பாட்டியின் வீட்டு முற்றத்தில் இருவரும் பாட்டியிடம் கதைகேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென வானத்தை அண்ணார்ந்து நோக்கினர். நீலப்பட்டாடையில் வைரங்கள் பதித்தது போல் நீல வானில் விண்மீன்கள் மின்னிக்கொண்டிருந்தன. நடுவிலே வெண்ணிலா நீலக் கடலில் ஓடம்போல் ஓடிக்கொண்டிருந்தது. நிலவில் இலக்கியாவும் ஓவியனும் ஓடிப்பிடித்து விளையாடினார்கள். மறு நாட்காலை பறவைகளின் இனிய இசையைக் கேட்டு இருவரும் கண்விழித்தனர். பாட்டியின் சமையல் கமகம என மணத்தது. இருவரும் குளித்துவிட்டுக் காலை உணவை உண்ணத் தொடங்கினர். பாட்டி அவித்த இட்டலி மல்லிகைப் பூப்போல் மென்மையாகவும் வெண்மையாகவும் சுவையாகவும் இருந்தது. பகல் உணவை அணியஞ் செய்வதற்காகப் பாட்டி அடுக்களையில் வேலை செய்துகொண்டிருந்தார். ஓவியனும் இலக்கியாவும் பாட்டிக்கு உதவி செய்தனர். திடீரென வெய்யில் எறித்துக்கொண்டிருக்கும் போதே மழையும்

வந்தது. புழுதியில் மழை பட்டதனால் நல்ல மண் மணம் கிளம்பியது. அந்த மண் மணத்தை அவர்கள் எங்குமே அறிந்திருக்கவில்லை. அந்த மணம் அவர்களுக்குப் பிடித்திருந்தது. வெளியே போய்ப் பாருங்கள் வானவில் தெரியும் என்றார் பாட்டி. ஆசையுடன் வெளியே ஓடி வந்தார்கள். மழைத்தூறலில் நனைந்தபடியே அழகான ஓவியம் போல பல வண்ணங்களில் அடுக்கி வைத்த விற்கள் போல் காட்சி அளித்த வானவில்லைப் பார்த்து இருவரும் மகிழ்ந்தனர். திடீரென ஓவியனின் முகம் வாடிய மலர் போல் கூம்பியது. அவன் யாருடனும் பேசாமல் போய் வீட்டின் ஒரு மூலையில் அமர்ந்தான். வட்டில்களில் உணவுடனும் குவளையில் நீருடனும் பாட்டி வந்தார். வண்ணத்துப்பூச்சிபோல சிறகடித்த குழந்தைகள் அமைதியாகிவிடப் பாட்டியின் மனம் கல்லெறிந்த வெள்ளம்போல் கலங்கியது.

என்ன நடந்தது ஏன் இப்படி இருகின்றீர்கள் எனப் பாட்டி அன்புடன் கேட்டார். அப்போது இருவரும் நாங்கள் உங்களுடன் தான் இருக்கப்போகின்றோம். வெளிநாட்டுக்குப் போகமாட்டோம் என்றனர். பாட்டியின் கண்களிலிருந்து அருவிபோல் கண்ணீர் கொட்டியது. தங்கள் மண்ணில் ஓடிவிளையாட இந்தப் பச்சிளம் பாலகர்கள் நினைப்பது என்ன தவறு. ஆயிரம் மடி இருந்தாலும் தாய்மடி போல் வருமா? ஆயிரம் மண் இருந்தாலும் தாய்மண் போல வருமா? தாய் மடியை விடத் தாய் மண்ணை நேசிக்கும் தன்பேரப் பிள்ளைகளைக் கட்டியணைத்தார். அனலில் இட்ட மெழுகுபோல் பாட்டியின் மனம் உருகியது. தானைத் தலைவன் கனவும் ஒருநாள் நனவாகும் என அவர் நினைத்தார்.